# 10 எனது குடும்பம்

எனது பெயர் வசந்தன். எனது அப்பாவின் பெயர் கமலன். அம்மாவின் பெயர் கமலினி. அம்மா அன்பாக இருப்பார். நாங்கள் நாவலப்பிட்டியில் வசிக்கின்றோம். தம்பியின் பெயர் ரூபன். தங்கை ரூபிகா எங்களோடு அன்பாக இருப்பாள். நாங்கள் கதிரேசன் மகா வித்தியாலயத்தில் படிக்கின்றோம். நான் ஏழாம் தரத்தில் கல்வி கற்கின்றேன். தம்பி ஐந்தாம் தரத்திலும் தங்கை மூன்றாம் தரத்திலும் படிக்கின்றனர். அப்பா புகையிரத நிலைய அதிபராகக் கடமையாற்றுகின்றார். அம்மா எனது பாடசாலையிலே ஆசிரியையாகக் கடமையாற்றுகின்றார்.



ஓய்வுநேரத்தில் அப்பா வீட்டுத் தோட்டத்தில் வேலை செய்வார். நானும், தம்பியும் அப்பாவுடன் தோட்டத்தில் வேலை செய்வோம். அம்மா ஓய்வு நேரங்களில் பூக்கன்றுகளைப் பராமரிப்பார். பூக்கன்றுகளை அம்மா விற்பனை செய்வார். இதன் மூலமும் அம்மா வருமானத்தைப் பெறுவார்.

தொலைக்காட்சி பார்த்தல், புத்தகம் வாசித்தல், பத்திரிகை வாசித்தல் என்பன எனது பொழுதுபோக்குகளாகும். நாங்கள் மிகவும் மகிழ்ச்சியாக வாழ்கின்றோம்.

**பெரியோரைக் கனம் பண்ணுவோம்.**
**වැඩිහිටියන්ට ගරු කරමු.**

**அரும்பதங்கள்**

| | | |
|---|---|---|
| அன்பாக | - | ආදරයෙන් |
| படிக்கின்றோம் | - | ඉගෙන ගන්නෙමු |
| கல்வி | - | අධ්‍යාපන |
| புகையிரத நிலையம் | - | දුම්රිය ස්ථානය |
| ஆசிரியை | - | ගුරුතුමිය |
| புகையிரத நிலைய அதிபர் | - | දුම්රිය ස්ථානාධිපති |
| ஓய்வு நேரம் | - | විවේක වේලාව |
| வீட்டுத் தோட்டம் | - | ගෙවත්ත |
| வேலை செய்வோம் | - | වැඩ කරමු |
| பூக்கன்று | - | මල් පැළ |
| வருமானம் | - | ආදායම |
| மகிழ்ச்சியாக | - | සන්තෝසයෙන් |
| வாழ்கின்றோம் | - | ජීවත් වෙමු |
| தரம் | - | ශ්‍රේණිය |


## செயற்பாடு 01

பாடத்தை உரத்து வாசிப்போம்.

## செயற்பாடு 02

**படிவம் நிரப்புவோம்.**
**පත්‍රිකා පුරවමු.**

1. எனது பெயர்:- வசந்தன்
2. எனது ஊர்:- ......................................................................
3. நான் படிக்கும் பாடசாலையின் பெயர்:- ..............................
4. எனது வகுப்பு:- ..................................................................
5. எனது அப்பாவின் பெயர்:- ...................................................
6. எனது அப்பாவின் தொழில்:- ...............................................
7. எனது அம்மாவின் பெயர்:- ..................................................
8. எனது அம்மாவின் தொழில்:- ..............................................
9. ஓய்வு நேரத்தில் அப்பாவின் வேலை:- ..............................
10. எனது பொழுது போக்கு:- ....................................................



## செயற்பாடு 03

**ஆண்பால், பெண்பால் எழுதுவோம்.**
**පුරුෂ ලිංග, ස්ත්‍රී ලිංග පද ලියමු.**

1) அப்பா ............ அம்மா

2) தம்பி ............................................

3) ஆசிரியன் ............................................

4) மாமா ............................................

5) அண்ணா ............................................


6) நடிகன் ............................................

7) பிச்சைக்காரன் ............................................

8) தலைவன் ............................................

9) மாணவன் ............................................

10) வேலைக்காரன் ............................................



## செயற்பாடு 04

**சிங்களத்தில் எழுதுவோம்.**
**සිංහලට හරවා ලියමු.**

1) எனது பெயர் ...........................................................................


2) அம்மாவின் பெயர் ...................................................................

3) அப்பாவின் பெயர் .....................................................................

4) புகையிரத நிலையம் ..................................................................

5) வீட்டுத் தோட்டம் .....................................................................

6) தொலைக்காட்சி ......................................................................



## செயற்பாடு 05

**ஒழுங்கான வாக்கியமாக அமைப்போம்.**
**වචන ගළපා වාක්‍ය සාදමු.**

1) பெயர் / எனது / வசந்தன்
   எனது பெயர் வசந்தன்.

2) அதிபர் / நிலைய / புகையிரத / அப்பா

   .......................................................................................

3) வசிக்கின்றோம் / நாவலப்பிட்டியில் / நாங்கள்


   .......................................................................................

4) அம்மா / ஆசிரியை / எனது

   .......................................................................................

5) மிகவும் / வாழ்கின்றோம் / நாங்கள் / மகிழ்ச்சியாக

   .......................................................................................



## செயற்பாடு 06

பாடத்தின் இரண்டாம் பந்தியைச் சொல்வதெழுதலுக்காகக் கொடுக்கவும்.

**කියවන විට පාඩමේ දෙවෙනි ඡේදය ලියවන්න.**


..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................



**செயற்பாடு 07**

**பின்வரும் நிலைகளை அறிந்து கொள்வோம்.**
**තේරුම් ලියන්න.**

முதலாம் ...........................................................

இரண்டாம் ...........................................................

மூன்றாம் ...........................................................

நான்காம் ...........................................................

ஐந்தாம் ...........................................................


ஆறாம் ...........................................................

ஏழாம் ...........................................................

எட்டாம் ...........................................................

ஒன்பதாம் ...........................................................

பத்தாம் ...........................................................



## செயற்பாடு 08

**மேலே தரப்பட்டுள்ள சொற்களில் இருந்து பொருத்தமானவற்றைத் தெரிவு செய்து இடைவெளிகளை நிரப்புவோம்.**

**7 වන අභ්‍යාසයේ ඇති වචනවලින් සුදුසු ඒවා තෝරා පහත සඳහන් වාක්‍යවල හිස්තැන් පුරවන්න.**

---

1. நான் ஓட்டப்போட்டியில் ................................ இடத்தைப் பெற்றேன்.

2. எனது தங்கை ......................................... தரத்தில் படிக்கின்றாள்.


3. எங்கள் குடும்பத்தில் நான் .................................. பிள்ளை.

4. எனது பிறந்த நாள் ........................................... மாதத்தில் வருகின்றது.

5. ............................................ திகதி பேச்சு போட்டி நடைபெறும்.

6. நான் பரீட்சையில் ......................................... இடத்தைப் பெற்றேன்.

7. எனக்கு ........................................................... வகுப்பில் இரு சகோதரர்கள் கல்வி கற்கின்றனர்.

 **செயற்பாடு 09**

**தரப்பட்டுள்ள காலத்திற்குப் பொருத்தமான ஏனைய இரு காலங்களையும் எழுதுவோம்.**
**දී ඇති ක්‍රියා පද අනෙක් කාල දෙකෙහි වර නගා ලියන්න.**

| இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
|---|---|---|
| வசித்தோம் | வசிக்கின்றோம் | வசிப்போம் |
| .......................................... | .......................................... | இருப்பாள் |
| .......................................... | படிக்கின்றோம் | .......................................... |
| பெற்றார் | .......................................... | .......................................... |
| .......................................... | .......................................... | செய்வோம் |
| .......................................... | ஓடுகிறோம் | .......................................... |
| .......................................... | வாசிக்கின்றேன் | .......................................... |
| .......................................... | .......................................... | இருப்போம் |
| .......................................... | வருகின்றது | .......................................... |
| தந்தான் | .......................................... | .......................................... |
| .......................................... | சிரிக்கின்றான் | .......................................... |

## செயற்பாடு 10

**படத்தைப் பார்த்து வாக்கியம் அமைப்போம்.**
**පින්තූර බලා වාක්‍ය සාදමු.**









